# அறிவுச்சுரங்கம் கல்வியகம்

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI

வீரமுனை

வாழ்க்கையை வளமாக்க வாய்ப்புக்களை வழங்கிடுவோம்.

**ஆசான் – S.அஜீந்தன் (B.A)** 0772633389 **வீரமுனை, சம்மாந்துறை. அம்பாறை**

WhatsApp - **0772633389** க்கு உங்கள் பெயர் முகவரியை அனுப்பி எமது பரீட்சை வழிகாட்டி குழுவுடன் இணைந்து கொள்ளுங்கள். எமது WhatsApp பரீட்சை வழிகாட்டிக் குழுவில் PDF இல் வினாத்தாள்கள் அனுப்பப்படும். வினாத்தாள்களை பெற்றுக்கொள்ள உமது முகவரியை அனுப்பும் பட்சத்தில் எம்மால் உங்களது விபரம் அறியப்பட்டு வினாத்தாள்கள், மற்றும் பாடக்குறிப்பு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

# புலமைப்பாதை

## தரம் 5

## வெளியீடு 10

## தமிழ்மொழி

## அலகு 01

புதிய பாடத்திட்டம்


மாணவர் பெயர்

**வெற்றி பெறுவது மிகவும் எளிமையானதே.**

எதை செய்கிறாய்
என்பதை அறிந்து செய்.
செய்வதை
விரும்பிச் செய்.
செய்வதை
நம்பிக்கையோடு செய்.
வெற்றி நிச்சயம்!

## அலகு ரீதியான மீட்டல்

பவனி வரும் நிலா



சந்திரன் அழகானது. சந்திரனை நிலா, அம்புலி, நிலவு, மதி எனவும் அழைப்பதுண்டு. பல புலவர்கள் சந்திரனை வர்ணித்துப் பாடல்கள் பாடியுள்ளார்கள். கவிதைகளை இயற்றியுள்ளார்கள்.

## வினா -

பாடலையும் கருத்தையும் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மீனினம் ஓடிப் பரக்குதம்மா – ஊடே

வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா

வானுங் கடலாக மாறுதம்மா - இந்த

மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா

அம்மா, இந்த ஆகாயம் கடலைப் போலத் தோன்றுகிறது. அந்தக் கடலிலே, வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வது போல சந்திரன் காணப்படுகிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன. இந்த அழகிலே என்மனம் மிகவும் மகிழ்கிறது.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

01) இப்பாடலை இயற்றியவர் யார்?

.....................................................................................................

02) ஆகாயம் எதைப்போல தோன்றுகிறது என கவிஞர் குறிப்பிடுகின்றார்?

.....................................................................................................

03) சந்திரன் எவ்வாறு செல்கின்றது எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்?

.....................................................................................................

.....................................................................................................

04) வானத்திலுள்ள நட்சத்திரங்கள் எவ்வாறு பரவுகின்றன என குறிப்பிடுகின்றார்?

.....................................................................................................

05) ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

1. எழில் - ................................................................

2. ஆகாயம் - ................................................................

3. மாட்சி - ................................................................

4. உள்ளம் - ................................................................

5. கடல் - ................................................................

06) பிரித்து எழுதுக.

1. மாட்சியிலுள்ளம் - ........................... + .......................

2. ஓடமொன்று - ........................... + .......................

3. மீனினம் - ........................... + .......................

## வினா –

பாடலையும் கருத்தையும் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா – அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பி தம்மா – மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா

அம்மா, சந்திரன் உதயமாகும் போது தாமரை மலர்கள் துன்பமடைகின்றன. ஆம்பல் மலர்கள் மலர்ந்து மகிழ்ச்சியடைகின்றன. ஒருவர் துன்பமடைய மற்றொருவர் மகிழ்ச்சி அடைவதுதான் இந்த உலகின் இயல்பு. ‘‘சந்திரனுக்குப் பகைவர், நண்பர்’’ என்று இவ்வுலகில் யாரேனும் உளரோ.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

07) இப்பாடலை இயற்றியவர் யார்?

............................................................................................

08) சந்திரன் உதயமாகும் போது துன்பமடையும் மலர் எது என கவிஞர் குறிப்பிடுகின்றார்?

............................................................................................

09) சந்திரன் உதயமாகும் போது மகிழ்ச்சியடையும் மலர் எது என கவிஞர் குறிப்பிடுகின்றார்?

............................................................................................

10) இந்த உலகின் இயல்பு எது என கவிஞர் குறிப்பிடுகின்றார்?

............................................................................................

11) ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?

1. அம்புயம் - ........................................
2. இன்னார் - ........................................
3. இனியார் - ........................................

## வினா -

பாடலையும் கருத்தையும் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா – பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

தாயே, சந்திரன் சிலநாட்களுக்கு முன்பு ஒரு சிறிய வில்லைப் போல வளைவாகக் காணப்பட்டதே. இப்பொழுது பொன்னாற் செய்த குடம் போலத் தோன்றுகிறதே. இஃது என்ன அதிசயம்! இஃது இந்திரசால வித்தையோ கூறு.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

12) இப்பாடலை இயற்றியவர் யார்?

..................................................................................................

13) செம்பொற்குடம் போல தோன்றுவது எது?

..................................................................................................

14) “செம்பொற்குடம் போல தோன்றுதம்மா” என்ற வரியில் இடம்பெற்றுள்ள அணி எது?

..................................................................................................

15) ‘‘சின்னஞ்சிறு வில்லாய்க் கண்டதம்மா’’ என்ற வரியில் இடம்பெற்றுள்ள அடுக்கிடுக்குத் தொடரினை எழுதுக?

.................................................................................

16) ‘‘புதுமை’’ என்பதன் ஒத்த சொல்லை பாட்டில் இருந்து எழுதுக?

.................................................................................

**வினா -**

பாடலையும் கருத்தையும் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா – உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா – கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

அம்மா, சந்திரன் வளர்ந்து பெருகிப் பூரணமாக வட்டவடிவமாகி விட்டது. பின்னர் மறுபடியும் தேய்ந்து தேய்ந்து போகிறது. அது கண்ணுக்கே சற்றும் தெரியாமற் போய்விடுகிறது.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

17) இப்பாடலை இயற்றியவர் யார்?

.................................................................................

18) கவிஞர் சந்திரனின் உடல் வளர்ந்து எந்த வடிவமாக வருகின்றது எனக் குறிப்பிடுகின்றா?

.................................................................................

19) பிரித்து எழுதுக.

1. பெருகுதம்மா - ....................... + .....................

2. வருகுதம்மா - ....................... + .....................

❖ தரப்பட்டுள்ள சொற்களில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களை நீங்கிப் புதிய சொற்களை உருவாக்குவோம்.

20) இம்மை – ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது கண்ணைப் பாதுக்காப்பது ..........................................................

21) பயணம் - ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது அச்சம் ...............................................

22) வானரம் - ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது ஆகாயத்திற்கு ஒத்த சொல் ................................................

23) அசுத்தம் - ஓர் எழுத்தினை நீக்கினால் கிடைப்பது தூய்மை - .....................................................

24) கானகம் - ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது பாட்டு ...............................................

25) மாட்சி – ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது ஒரு மாதத்தின் பெயர் - ................................................

26) எழுத்து - இரண்டு எழுத்தினை நீக்கினால் கிடைப்பது வினாக்களை கேட்பது ........................................

27) பந்தி – ஒரு எழுத்தினை நீக்கினால் கிடைப்பது – தலைவனுக்கு ஒத்த சொல் ...................................

28) மக்கள் - ஓர் எழுத்தினை நீக்கினால் புத்திரி வருவாள் - ..........................................................

29) வாழ்க்கை - இரு எழுத்துக்களை நீக்கினால் மரங்களில் ஒன்று ..........................................................................

30) அவமானம் - இரு எழுத்துக்களை நீக்கினால் அடவியின் ஒத்த பதம் .........................................................

31) கவின் - ஓர் எழுத்தை நீக்கினால் கவிஞரால் உருவாக்கப்படுவது கிடைக்கும் ........................................

32) கருணை – ஓர் எழுத்தினை நீக்கினால் வேடன் கையில் இருப்பது ...........................................................

33) ஓட்டம் - ஒரு எழுத்தினை நீக்கினால் கிடைப்பது – நீர் மார்க்கத்திற்குரியது - ............................................

❖ வினாக்களுக்கு விடை எழுதுக.

34) உயிர் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை எழுதுக?

..............................................................................................

..............................................................................................

35) மெய் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை எழுதுக?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

36) உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை?

............................................................................................

37) ஆய்த எழுத்து எத்தனை?

............................................................................................

38) தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?

............................................................................................

